சேர்ப்பதற்கு அரசு ஏற்கனவே ஆய்வு செய்து, அவ்விதம் சேர்க்கத் தேவையில்லை என முடிவு செய்து, 10–11–1988-ல் ஆணை வெளியிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9–55 மணி

திரு. ந. நஞ்சப்பன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்தில் பழங்குடி மக்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ள இந்த போயர் மக்கள் தமிழகத்தில் அத் தகைய நிலையில் அறிவிக்கப்படவில்லை. அரசுக்குப் பரிந்துரை செய்ய இருப்பதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கும் அந்தச் சமுதாய மக்கள் பன்றி மேய்ப்பதும், கல் உடைப்பதுமான சாதாரண தொழிலில் ஈடுபட்டு வளர்ச்சி யின்றி இருக்கிறார்கள். அவர்களை அங்கீகரிக்கின்ற வரையில், ஏதேனும் சிறப்புத் திட்டங்களை வகுத்து, அவர்களுடைய வளர்ச்சிக்கு வழிகோலப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் ; தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு பரிசீலனை செய்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவிடைமருதூர் அரசு மருத்துவமனை.

*3141 திரு. செ. இராமலிங்கம் :

மாண்புமிகு மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவிடைமருதூர் பேரூராட்சி அரசு மருத்துவ மனையில் எக்ஸ்ரே பிரிவு, ஆய்வுக்கூடம், கூடுதல் படுக்கைகள், அறுவை சிகிச்சைக்கூடம் ஆகியவை ஏற்படுத்தப்படுமா ?

(ஆ) இதற்கான திட்டச் செலவு எவ்வளவு ?

(இ) தாலுகா மருத்துவமனை என்பதால் இப்பணிகள் இவ்வாண்டிலேயே தொடங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஒரு ஆய்வுக்கூடம் ஏற்கெனவே இயங்கி வருகிறது. ஆனால் எக்ஸ்ரே பிரிவு, அறுவை சிகிச்சைக் கூடம், கூடுதல் படுக்கைகள் ஆகிய வசதிகள் தற்பொழுது எடுத்துக் கொள்ளத் திட்டம் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

(இ) இல்லை.

1990 மார்ச் 21]

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மருத்துவமனைக்கு நாள்தோறும் சுமார் 500 புறநோயாளிகள் சிகிச்சைக்காக வருகின்றனர். அவர்களில் பலரை எக்ஸ்ரே படம் எடுப்பதற்காக தஞ்சை, குடந்தை போன்ற தொலைதூர மருத்துவமனைக்கு அனுப்புகிறார்கள். அதனால் ஏழை நோயாளிகள் பலரும் பல்வேறு அவதிக்கு உள்ளாயிருக்கிறார்கள். எனவே உடனடியாக இந்த அவல நிலையைக் கணக்கில் கொண்டு இந்த ஆண்டு எக்ஸ்ரே பிரிவை ஆரம்பிக்க அரசு ஆணையிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதி நிலைமைக்கேற்ப அதற்கான ஏற்பாடுகள் படிப்படியாக செய்யப்படும்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இம்மருத்துவமனையில் அமைந்துள்ள மகப்பேறு மருத்துவமனைக் கட்டிடம் போதிய வசதி உள்ளதாக இல்லை. எனவே புதிய மகப்பேறு பிரிவுக் கட்டிடமும், அதைப்போன்று ஸ்பெசலிஸ்டுகள், கண் சிகிச்சை நிபுணர், பல் சிகிச்சை நிபுணர், எலும்பு முறிவு சிகிச்சை நிபுணர், குழந்தைகள் சிகிச்சை நிபுணர் போன்ற நிபுணர்களைத் தொலை தூர நகரங்களில் அமைந்திருக்கின்ற மருத்துவமனைகளுக்கு நியமிக்க அரசு ஆணையிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதிலிலே இதற்கான பதிலும் அடங்கியிருக்கிறது.

குடிநீர்த் திட்டம்

***5507 திரு. அ. லெ. சுப்பிரமணியன்** :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெல்லைத் தொகுதியில் நாரணம்மாள்புரம் பேரூராட்சி, இராஜவல்லிபுரம் ஊராட்சி, சங்கர் நகர் நகரியம் ஆகிய பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த பாதுகாக்கப்பட்ட ஆற்றுக் குடிநீர் வழங்குகின்ற திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அழகநேரி கரையிருப்பு ஆகிய பஞ்சாயத்துப் பகுதிகளையும் இத்திட்டத்தோடு இணைத்து நிறைவேற்றிட அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அனுமதி வழங்கி உள்ளது.

(ஆ) இல்லை. தற்போது இயலாது.